1987 நவம்பர் 17] [திரு. மா. மீனாட்சிசுந்தரம்]

ஆகவே, இறந்தவரின் குடும்பத்திற்கு இந்த அரசு அனுதாபத்தோடு உதவி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், பாதிக்கப்பட்டவர்களில் இன்னும் பலபேர் மருத்துவமனையிலே இருக்கிறார்கள். அவர்களும் உடனடியாக வேலைக்குச் சென்று வேலைசெய்ய முடியாதபடி உடல்நிலை கோளாறாக இருக்கின்ற காரணத்தால், அரசு அவர்களுக்கு உதவி செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் 'பாண்டட் லேபர்'' ஆக இருப்பார்களேயானால் இதுகுறித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பை மாவட்ட ஆட்சியாளர் அவர்களிடத்திலும், அந்த மாவட்ட ரெவின்யூ ஆபீசர் இடத்திலும் ஒப்படைத்து இருக்கிறோம். அவர்கள் அதன்பேரில் நடவடிக்கை எடுத்து, அவர்கள் தருகின்ற விவரத்தை வைத்து, உண்மையிலேயே அவர்கள் கடத்தப்பட்டதாக இருக்குமானால், அவர்களிடமிருந்து பெறப்படுகின்ற அறிக்கையின்மீது, அரசு நடவடிக்கை எடுக்கும்.

(நண்பகல் 12-00)

5. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கைகளைக் குழுவின் தலைவராகிய நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன் :

" (அ) 1972-73 முதல் 1975-76 ஆம் ஆண்டுகள் வரையிலான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1985-86) அளித்த இருபத்தொன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த மேல்நடவடிக்கைபற்றிய மேற்படி குழுவின் ஐம்பத்தி ஐந்தாவது அறிக்கை;

(ஆ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1970-71 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான குறிப்புகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின்

(1985-86) ஒன்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கைபற்றிய மேற்படி குழுவின் ஐம்பத்தாறாவது அறிக்கை".

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு கடன் நிவாரண (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".